1974 சனவரி 24]

**திரு. கா. வேழவேந்தன்** : தலைவரவர்களே, இந்த இரண்டு பாலங்களுக்கும் அரசு அனுமதி அளித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில், அங்குள்ளவர்கள் மறு புறம் செல்வதற்கு முடியாமல் இருப்பதால் இந்த ஆண்டே துவக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, ஒரு பாலத்திற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பாலத்திற்கு அரசின் பரிசீலனை முடிந்தபிறகு ஆணை பிறப்பிக்கப் படும்.

### ஜெயமங்கலம், மேல்மங்கலம் சாலையிலுள்ள பாலத்தை அகலப்படுத்தல்.

*139 வினா—**திரு. நா. வெ. குருசாமி** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஜெயமங்கலத்துக்கும், மேல்மங்கலத் துக்கும் இடையில் உள்ள திருப்பத்தில் உள்ள பாலத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : ஆம்.

### கள்ளு, சாராயக் கடைகளின் ஏலத்தொகை.

*52 வினா—**திரு. கே. எம். சுப்பிரமணியம்** : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பு ஆண்டில், சாராயக் கடைகள் ஏலம் விடப் பட்டதன் மூலம், ஜூலை 30-ஆம் நாள் முடிய கிடைத்தத் தொகை எவ்வளவு ?

(இ) சென்ற ஆண்டு, அதாவது செப்டம்பர் 30-ஆம் நாள் வரையிலான ஆண்டிற்கு, சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் ஏலம் விடப்பட்டதன் மூலம் கிடைத்த மொத்தத் தொகை எவ்வளவு ?